ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

# விண்ணப்பங்கள் கோரல் : சிறுவர் குரலெழுப்பும் மன்றம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 15-17 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான முன்னோடித் திட்டமான இலங்கையில் சிறுவர் உரிமைகள் தொடர்பான அவர்களின் கருத்துக்கள், அனுபவங்கள் மற்றும் பிரச்சனைகளை முன்வைப்பதற்காக சிறுவர் குரலெழுப்பும் மன்றத்தை (CVF) தாபிக்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் (UNCRC) கோட்பாடுகள் மற்றும் உறுப்புரை 12 க்கு இணங்க தீர்மானமெடுக்கும் செயல்முறையில் சிறுவர்களின் குரல்களை ஒருங்கிணைப்பதை இம்மன்றம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த மன்றமானது இலங்கையில் சிறுவர் உரிமைகள் பற்றிய சிறுவர்களின் அனுபவங்களையும் கருத்துக்களையும் சேகரித்தல், கலந்துரையாடல்களில் தீவிரமாக பங்குபற்றுதல் மற்றும் அவர்களின் பிரச்சினைகளை நேரடியாக வெளிப்படுத்த தேவையான வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் சிறுவர்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த மனித உரிமைகளுக்கான பங்கேற்பு அணுகுமுறையை வளர்ப்பதற்கும், ஆணைக்குழுவின் எதிர்காலப் பணிகளில் சிறுவர்களின் உரிமைகளை ஒருங்கிணைப்பது தொடர்பான நடவடிக்கைக்குரிய பரிந்துரைகளை உருவாக்குவதற்கும் இந்த முயற்சி முனைகிறது.

மேல் மாகாணத்தில் உள்ள பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த 15-17 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இந்த முன்னோடி திட்டத்தில் பங்கேற்க விண்ணப்பிக்கலாம். இது தொடர்பில் ஆர்வமுள்ள சிறுவர்கள் **2025 ஜனவரி 31** ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியும்.

நீங்கள் மேலும் தகவல்களை அறிய விரும்பினால், சிறுவர் உரிமை அலகை தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம் - 011 2505569
மின்னஞ்சல் முகவரி - cru.hrcsl@gmail.com

நாம் அனைவரும் ஒன்றிணைந்து சிறுவர்களின் குரல்களை ஊக்குவிப்போம் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை வலுப்படுத்துவோம்.

**ரஞ்சித் உயங்கொட,**
**செயலாளர்,**
**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**